4. கவன ஈர்ப்புகள்

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் பேரூராட்சி டயானா மனமகிழ் மன்றத்தில் செயல்படும் மதுக்கூடத்தினை அகற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்புகள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எச். வசந்தகுமார், திருமதி எஸ். விஜயதரணி, திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. ச. பாண்டி, திரு. செ. ராஜேஷ் குமார் மற்றும் திரு. ஆர். கணேஷ் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். பிறகு பேசலாம். உட்காருங்கள். இல்லை, இல்லை, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, என் அறைக்கு வந்து எங்களுடைய உறுப்பினர்களுக்கு அரசின் கவனத்தை ஈர்க்க நிறைய வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்டீர்கள். அப்போது என்ன சொன்னீர்கள் தெரியுமா? அவர்கள் mention செய்ய அனுமதித்தால் போதும், மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்லக்கூடத் தேவையில்லை என்று நீங்கள் சொன்னீர்கள். நான் mention செய்ய வாய்ப்புக் கொடுத்தேன். (குறுக்கீடு) இன்னும் நிறைய உறுப்பினர்களின் பெயரை எழுதி வைத்திருந்தேன். (குறுக்கீடு) ஆனால், பொன்முடி, இன்றைக்கு நடந்துகொண்ட விதம், உங்களுடைய உறுப்பினர்களின் வாய்ப்பை அவரே கெடுத்து விட்டார். அதனால் நான் என்னுடைய programme–படி அடுத்த Agenda–க்குப் போகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள். (குறுக்கீடு) நாளைக்குப் பார்க்கலாம், உட்காருங்கள். நாளைக்குப் பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நாளைக்குப் பார்ப்போம். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.

பிற்பகல் 12–10

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர்

2017 ஜூலை 18] **[திரு. செ. ராஜேஷ் குமார்]**

தொகுதிக்குட்பட்ட, கருங்கல் பேரூராட்சி, கருங்கல் பேருந்து நிலையத்திற்கு முன்னால், தக்கலை சாலையில், டயானா மனமகிழ் மன்றம் என்ற பெயரில் ஒரு மதுக்கடை இயங்கி வருகிறது. அந்த மதுக்கடையைப் பொறுத்த வரையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ராஜேஷ் குமார், கவன ஈர்ப்பு என்றால் நிகழ்ச்சி நிரலில் என்ன இருக்கிறதோ அதைத்தான் படிக்க வேண்டும்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *விவரமாகச் சொல்ல வேண்டுமல்லவா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கவன ஈர்ப்பு என்ன என்பதைப் படியுங்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். வாசகத்தைப் படியுங்கள். 'கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் பேரூராட்சியில் உள்ள டயானா மனமகிழ் மன்றத்தில் செயல்பட்டு வரும் மதுக்கூடத்தினை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' திரு. ராஜேஷ் குமார் அவர்கள் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்றார். அப்படித்தான் நீங்கள் கேட்க வேண்டும். உட்காருங்கள். மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

மாண்புமிகு உச்ச நீதிமன்றம் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் நாள் மற்றும் 2017 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாளிட்ட தனது ஆணையில்,

"20,000 மற்றும் அதற்கும் குறைவாக மக்கள்தொகை கொண்ட உள்ளாட்சிப் பகுதிகளில் தேசிய/மாநில நெடுஞ்சாலை/ நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள அணுகுபாதையிலிருந்து 220 மீட்டர் தூரத்திற்குள் மதுபானங்கள் விற்பனை செய்வதற்கு உரிமம் வழங்கக்கூடாது என்றும், 20,000–க்கும் அதிகமாக மக்கள்தொகை கொண்ட உள்ளாட்சிப் பகுதிகளில் தேசிய/மாநில நெடுஞ்சாலை/நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள அணுகுபாதையிலிருந்து

500 மீட்டர் தூரத்திற்குள் மதுபானங்கள் விற்பனை செய்வதற்கு உரிமம் வழங்கக்கூடாது” என்றும் உத்தரவிட்டுள்ளது.

கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட கருங்கல் பேரூராட்சியின் மக்கள்தொகை 16,691 ஆகும். மேற்படி பேரூராட்சியில் இயங்கிவரும் டயானா மனமகிழ் மன்றம் மாநில நெடுஞ்சாலையிலிருந்து 220 மீட்டர் தூரத்திற்கு அப்பால் 240 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளதால் மாண்புமிகு உச்ச நீதிமன்ற உத்தரவின்கீழ் கவரப்படவில்லை. எனவே, மேற்படி டயானா மனமகிழ் மன்றத்தில் செயல்பட்டுவரும் மதுபானக் கூடத்தினை மூடவேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜேஷ் குமார், இப்போது சொல்லுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருங்கல் பேரூராட்சிக்குட்பட்ட, கருங்கல் பேருந்து நிலையத்திற்கு அருகில் டயானா மனமகிழ் மன்றம் என்ற பெயரில் ஒரு மதுபான பார் இயங்கிக்கொண்டு வருகின்றது. இந்த மதுபான பாரை பொறுத்தவரையில், உச்ச நீதிமன்றத்தினுடைய அறிவுறுத்தலின்படி, மார்ச் 31 ஆம் தேதிக்குள் மாநில நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ் சாலையினுடைய இணைச் சாலையில் 220 மீட்டருக்குள் இருந்தால் அகற்ற வேண்டுமென்ற விதி இருக்கிறது. ஆனால், இந்த டயானா மனமகிழ் மன்றம், கிளப் பாரினுடைய சட்ட விதிமுறைப்படி அங்கே இயங்கவில்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி கேட்டபொழுது அதில் மிகவும் தெளிவாகக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு மனமகிழ் மன்றம் பார் நடத்த வேண்டுமென்று சொன்னால் அதற்குள்ளாக பொழுதுபோக்கு, அதற்குள்ளாக எத்தனை பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள், அந்த உறுப்பினர்களுடன் வருகின்ற guest எத்தனைபேர், அவர்களுக்கு மட்டும்தான் மதுவைக் கொடுப்பதற்கு சட்ட விதிமுறை இருக்கிறது. ஆனால், இந்த டயானா மனமகிழ் மன்றம் என்ற அந்த பார் 24 மணி நேரமும் அங்கே இயங்கிக்கொண்டு வருகின்றது. அதுபோல அந்தச் சாலை 220 மீட்டர், 2011 மக்கள்தொகைக் கணக்கீட்டின்படி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜேஷ் குமார், கேள்வியைக் கேளுங்கள்.

2017 ஜூலை 18]

திரு. செ. ராஜேஷ் குமார்: *220 மீட்டருக்குள் அந்த மதுபானக் கடை இருக்கிறது. அதுபோல 100 மீட்டர் இடைவெளிக்குள்* Assembly of Gods *என்ற சபையும், புனித சவேரியார் திருத்தலமும் இருக்கின்றது. ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டபொழுது 100 மீட்டருக்குள் இருந்தால் நிச்சயமாக அந்த மதுபான பாரை அந்த இடத்திலிருந்து அகற்றுவேன் என்று என்னிடம் சொல்லியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில், முழு நேரமும் இயங்குகின்ற டயானா மனமகிழ் மன்றம் என்ற அந்த மதுபான பாரை அகற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசின் கவனத்தைத் தங்கள் வாயிலாக ஈர்த்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கேட்டதாகச் சொல்கின்றார்கள். அது 240 மீட்டர் அளவிற்கு இருக்கிறது. உச்ச நீதிமன்றம் 20,000 மக்கள் தொகைக்கு உள்ளே இருந்தால் 220 மீட்டர் இருந்தால் போதும் என்று சொல்லியிருக்கிறது. அதன் நீளம் 240 மீட்டர் இருக்கின்றது. ஆக 240 மீட்டர் இருக்கின்ற காரணத்தினால் அதிலே ஒன்றும் தவறு இல்லை என்ற காரணத்தினால்தான் அந்த மனமகிழ் மன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோல டாஸ்மாக் கடைதான் கோயிலுக்கு அருகில் இருக்கக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. அதுபோன்று* F.L. *2 என்று சொல்லக்கூடிய மனமகிழ் மன்றத்திற்கெல்லாம் இல்லை. இருந்தாலும் இப்போது 100 மீட்டருக்குள் இருக்கின்றது என்று சொல்கிறார்கள். மனமகிழ் மன்றத்திற்கு அதுபோன்று சட்டம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரவு முழுவதும் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இரவு முழுவதும் இயங்கிக் கொண்டிருந்தால் நாங்கள் காவல் துறையினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று சட்டப்படி நடவடிக்கையை மேற்கொள்வோம். உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்தில் மொத்தம் 168 டாஸ்மாக் கடைகள் இருந்தன. இப்போது கிட்டத்தட்ட 63 கடைகள் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவிற்குப் பின்னால் மூடப்பட்டிருக்கின்றது. ஆக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த* F.L. *2 கடையை எடுக்க வேண்டுமென்று சொல்கின்றபோது, 240 மீட்டரில் இருக்கின்ற காரணத்தினால்*

சட்டத்திற்குட்பட்டு வரவில்லை. நீங்கள் சொல்கின்றபடி இரவு முழுவதும் நடக்கின்றது என்று சொன்னால், நாங்கள் காவல் துறைமூலம் ஆய்வு செய்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

பிற்பகல் 12—15

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மதுபானக் கடை இயங்குவதற்கு நேர் முன்பாக ஸ்டேட் பாங்க் இருக்கிறது. தினமும் கூடுகின்ற தினசரி சந்தை இருக்கின்றது. அதேபோல மீன் சந்தை இருக்கின்றது. அதற்குப் பின்னால் வழிபாட்டுத் தலங்கள் இருக்கின்றன. மக்கள் அதிகமாக வாழ்கின்ற குடியிருப்புகள் நிறைந்த பகுதி. ஆகையால் அந்தக் கடையை அந்த இடத்தைவிட்டு வேறு இடத்தில் வைத்தால்கூட பிரச்சினை இல்லை. ஏனென்று சொன்னால் அரசு நடத்துகின்ற மதுக்கடைபோல செயல்படவில்லை; முழு நேரமும் இயங்குகின்றது. அதன்மூலம், அரசுக்கு எந்த வருமானமும் கிடைப்பதில்லை. ஆகையால், இது முழுக்க, முழுக்க தனியார் நடத்துகின்ற மதுபான பார்; எனவே, அந்த இடத்தைவிட்டு வேறு இடத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். கருங்கல் பகுதி என்பது என்னுடைய சொந்த பஞ்சாயத்து, என்னுடைய சொந்த ஊர். நிறைய பேரை அங்கே* arrest *செய்திருக்கிறார்கள்.* ASP *தலைமையில், காவலர்கள் அங்கே ஆய்வு செய்தபோது, உள்ளே விற்பனை செய்து கொண்டிருந்தவர்களை* arrest *செய்திருக்கிறார்கள். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை முழுமையாக ஆய்வு செய்து, அந்த இடத்திலிருந்து மாற்றி, வேறு இடத்தில் வைத்தால்கூட எங்களுக்குப் பிரச்சினை இல்லை. அந்த இடமானது, தினந்தோறும் சந்தைக்குப் போகின்றவர்கள், மீன் வாங்க செல்பவர்கள் என மக்கள் அதிகமாக நடமாடுகின்ற பகுதியாகும். இந்த மதுபானக் கடையை நடத்துபவர்கள், 30 மில்லி, 60 மில்லி, 120 மில்லியென விற்கவில்லை;* full bottle*–ஐயும் விற்கிறார்கள். ஆதலால், அந்த இடத்திலிருந்து அதை மாற்றி வேறு இடத்திற்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமென தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

2017 ஜூலை 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அறிவிப்பு கொடுத்தவர்களுக்கு மட்டும்தான் கவன ஈர்ப்பில் பேச அழைக்க முடியும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, உங்கள் மாவட்டத்தில் மொத்தம் ஐந்து F.L. 2 கடைகள் இருந்தன. சட்டத்திற்குட்பட்டு, அவற்றில் மூன்று கடைகள் எடுக்கப்பட்டன. அந்த டயானா மனமகிழ் மன்றம் தற்போது செயல்பட்டு வருகிறது. அது, 240 மீட்டருக்கு அப்பால் இருக்கின்ற காரணத்தினால், அந்த மனமகிழ் மன்றம் இயங்கி வருகின்றது. இப்போது நீங்கள் சொல்வதைப்போன்று, டாஸ்மாக் கடை இருக்கிறதென்றால் நாளையதினமே அதை நாங்கள் எடுத்துவிடுவோம். சட்டத்திற்குட்பட்டு மனமகிழ் மன்றத்தை அவர்கள் நடத்தி வருகின்ற காரணத்தினால், அதை எடுத்தால், உடனடியாக அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வார்கள். நீதிமன்றத்திற்குச் சென்று stay வாங்குவார்கள். அதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. நீங்கள் உள்ளூரில் இருக்கிறீர்கள். நானும் அங்கேயிருக்கின்ற அதிகாரிகளுடன் கலந்துபேசி, இப்படி மக்களுக்கு இடைஞ்சலாக இருக்கின்றது என்பதால் மாற்றுங்கள் என்று சொல்கின்றோம். மற்றொன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, அங்கே State Bank இருக்கிறது; சந்தை இருக்கிறது என்று சொன்னார்கள். State Bank இருக்கிறது; சந்தை இருக்கிறது என்பதற்காக கடை வைக்காமல் இருக்க முடியாது. கோயில், பள்ளிக்கூடங்களின் அருகே இதுபோன்ற கடைகள் இருந்தால், நிச்சயமாக எடுக்கப்படும். எங்கே கொண்டு சென்று வைத்தாலும், இப்போது பிரச்சினை செய்கின்றனர். 2003 ஆம் ஆண்டிலிருந்து இருக்கின்ற டாஸ்மாக் கடையைக்கூட மாற்ற வேண்டுமென்றுகூட நீங்கள் போராட்டம் மற்றும் மறியல் எல்லாம் செய்தீர்கள். அந்தக் கடை 2003–லிருந்து இருக்கிறது. அப்போது மக்கள் போராடவில்லை; ஆனால், சட்டமன்ற உறுப்பினர் நீங்கள் இப்போது போராடி, அந்தக் கடையை எடுங்கள் என்று சொல்கிறீர்கள். ஆக, உங்கள் கருங்கல் பகுதியில் இருக்கின்ற மதுபானக் கடை எதுவாக இருப்பினும், நீங்கள் அதை எடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ஏனென்று சொன்னால்,

[திரு. பி. தங்கமணி] [2017 ஜூலை 18

மக்கள் போராடினால் தலைவணங்கி அதை மாற்றுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். இதைப் பொறுத்தவரை, இது தனியார் மனமகிழ் மன்றம்; அது சட்டத்திற்குட்பட்டுதான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. வேண்டுமென்றால், நாங்களும் அதிகாரிகளோடு கலந்துபேசி, முடிவெடுப்போம். பொதுவான பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினால், 'நீங்கள் வேறு இடத்தில் வைத்துக்கொள்ளுங்கள்' என்று நாங்கள் அவர்களுக்கு அறிவுரைதான் வழங்கமுடியுமே தவிர, சட்டப்படி நாங்கள் நடவடிக்கை எடுக்க முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) மடத்துக்குளம் தொகுதி, விவசாய விளைபொருட்களை சேமிக்க குளிர்பதனக் கிடங்கு அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மடத்துக்குளம் தொகுதியில் விவசாய விளைபொருட்களைச் சேமிக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு அறிவிப்பிற்கு உரிய விவர அறிக்கை பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.